1972 டிசம்பர் 4]

பொருளாதார நிபுணர்களின் கருத்து. அகில இந்திய ரீதியிலே பார்த்தால் தமிழ் நாடு தொழில் வளர்ச்சியில் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்று இருக்கிறது.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, எந்த எந்தத் தொழில்களுக்குக் கடன் வசதிகள் கொடுக்கப்படுகின்றன என்பதைப்பற்றிய தெளிவான ஒரு பட்டியல் இல்லாத குறைபாடு இருக்கிறது. அதை மாற்றியமைத்தாவது ஒரு முழுமையான பட்டியலை அமைத்து வெளியிட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படி ஒரு குறைபாடு இருப்பதாகத் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும், இந்தத் துறையின் மானியம் இங்கே விவாதத்திற்கு வந்தபொழுது தொழிழில் துறை பற்றிய பல்வேறான கடன் வசதிகளையும் கடன்வசதிகள் அளிக்கின்ற நிறுவனங்கள்பற்றிய விவரங்களையும் அங்கத்தினர்கள் பொதுமக்களுக்குத் தெரியப் படுத்தி அரசாங்கத்தினுடைய உதவியைப் பெறவேண்டுமென்று எடுத்துச் சொன்னேன். அதை மீண்டும் இன்றைக்கு நினைவுபடுத்துகிறேன்.

Sales Centre of Small Industries Corporation

• 31. *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the **Minister** for Industries be pleased to state—

(*a*) whether any sales counter has been opened by Tamil **Nadu Small Industries Corporation Limited in Madras City in April 1972; and**

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) 21—4—1972-ஆம் நாளன்று தமிழ்நாடு சிறு தொழில்கள் நிறுவனம் ஆயிரம் விளக்கு பகுதியில் அண்ணா சாலையில், 4/141 என் இடத்தில் ஒரு "விற்பனை நிலையம்" திறந்துள்ளது. 21—4—1972-லிருந்து 24—6—1972 வரை விற்பனையான தொகை ரூ. 45,995.91 (ரூபாய் நாற்பத்தைந்தாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஐந்தும், புதிய காசுகள் தொண்ணூற்றொன்றும்).

Railway line in Nilgiris district

• 32. *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the **Minister for Public Works be pleased to state whether this Government have represented to the Centre during 1972 not to dismantle the mountain railway in Nilgiris district?**